செய்தி வெளியீடு எண்: 303 நாள்: 07.06.2013

## பத்திரிக்கைச் செய்தி

### தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினர்கள் தேர்தலுக்கான முஸ்லீம் பாராளுமன்ற மற்றும் முஸ்லீம் சட்டமன்ற உறுப்பினர்கள் பிரிவு இறுதி வாக்காளர் பட்டியல்

தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினர்கள் தேர்தலுக்கு ஓட்டளிக்கும் உரிமை பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முஸ்லீம் சட்டமன்ற உறுப்பினர்கள் பிரிவுகளுக்கான இறுதி வாக்காளர் பட்டியல் தேர்தல் அதிகாரி மற்றும் முதன்மைச் செயலர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9, தமிழ்நாடு வக்ஃப் வாரிய அலுவலகம், சென்னை–1, அனைத்து மண்டல வக்ஃப் கண்காணிப்பாளர்கள் அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அலுவலகங்கள் ஆகிய அலுவலகங்களில் 08.06.2013 அன்று வெளியிடப்பட உள்ளது.

2. தேர்தல் நடத்துவதற்கான கால அட்டவணை விரைவில் வெளியிடப்படும். தேர்தல் அதிகாரி, தேர்தல் பற்றிய அறிவிக்கையை தமிழ்நாடு அரசிதழில் தனியாக வெளியிடுவார்.

(க.அருள்மொழி),<br>
தேர்தல் அலுவலர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்,<br>
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்<br>
சிறுபான்மையினர் நலத்துறை, தலைமைச் செயலகம்,<br>
சென்னை–600 009

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**